

கழகத் துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பு தனக்கு வழங்கப்பட்டதையொட்டி திருச்சி சிவா எம்.பி., கழக மூத்த முன்னோடி எல்.கணேசன் அவர்களை, சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கந்தர்வக்கோட்டையில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

தமிழ் கா அமுதரசன் -- அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப் பாண்டியன் கண்டன உரை!

புதுக்கோட்டை, ஏப். 22 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் சுந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞர் அணி அணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் 19.04.2025 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு. கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கந்தர்வ கோட்டை தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப் பாளர் எஸ்.ஆர். கலையரசன் வரவேற்புரை யாற்றினார். மாவட்ட இளைஞரணி துணை அமைப் பா ளர்கள், ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் இளஞ்சேரன் முத்துசாமி, சிவா என்கிற சிவகுமார், நா.அன்சாரி பாஷித், அம்பலவாணன், பே. ஆரோக்கியசாமி, ராசி பரூக், ச.ரமேஷ், கே. புஷ்பராஜ், ஒன்றிய நகர செயலாளர்கள் எம். பரமசிவம், மா.தமிழ் அய்யா, தவ.பாஞ்சாலன், வெ முத்துக்கிரு ஷ்ணன், என். சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சி. சண்முகம் , ஆர்.ஆர்.சாமிநாதன், உமுருகேசன், பி. அண்ணாத்துரை, பொதுக் குழு உறுப்பினர் ஆர்.செல்லத்துரை, டி.செல்வம், எம்.ராஜா, கே. எஸ்.சுப்பிரமணியன், ரவிச்சந்திரன், ராதிகா கருப்பையன், கோவிந்தன், சரவணன், நியூஸ் ராஜேந்திரன், குஞ்சப்பா, ராஜேந்திரன், ஒன்றிய நகர இளைஞரணி அமைப்பாளர்கள்

மு.நமச்சிவாயம், ரா. அசோக்குமார், ரா. முத்துசாமி, போஸ்கோ, கே.பிரகாஷ், மு. கஜேந்திரன், கே. சரவணன், புகழேந்தி, மணிவண்ணன் (எ) மதன், பிரபாகரன், அருண்குமார், முருகேசன், ஞானசந்திரன், கோபாலகிருஷ்ணன், சிவகுரு, கூத்தபெருமாள், சாகுல் ஹமீது, இளையராஜா, ரமேஷ், குமார், பா.வீரமணி, மணிவண்ணன், சின்னையா, சண்முகநாதன், அசோக்குமார், பிரபாகர் முத்துப்பாண்டி வீரமணி மணிவண்ணன் சிலம்பரசன், பாண்டியன், ஜியாவுல் ரகுமான், ஆனந்த், பிரகாஷ், சத்ய சாத், முருகேசன், லட்சுமணன், கற்பூரசோழன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் கா அமுதரசன், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன்,

இளம் தலைமை கழக பேச்சாளர் நேரு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் நா. இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கழக விவசாய அணி துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட துணைச் செயலாளர் பெ. ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம். லியாகத் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா, மாலா ராஜேந்திர துரை, எஸ். வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, நைனா முகம்மது, சொ.தமிழினியன், கை.பழனிச்சாமி, தெய்வானை, ராயல் சபா, சதீஷ், ஜினி இளங்கோ, மு.சண்முகம், என். அம்பிகாபதி, என்.கலையரசி, ஜி.கலியபெருமாள், ஆர். முத்துக் குமார், சைவ பாலகிருஷ்ணன், இரா.முத்துக் குமார், இரா.முருகேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் த.அரவிந்தன், கரம்பக்குடி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோ. செல்லத்துரை ஆகியோர் நன்றி கூறினார்கள்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞர் அணி அணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கந்தர்வகோட்டையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன், இளம் தலைமைக் கழக பேச்சாளர் நேரு, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், நா. இளையராஜா, சு.சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், பெ.ராஜேஸ்வரி, எம். லியாகத் அலி, கீரை.தமிழ் ராஜா, ஆர்.செல்லத்துரை, எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, தவ.பாஞ்சாலன், வெ.முத்துக்கிருஷ்ணன், என்.சேட்டு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கோவை - திருப்பூர் மாவட்டங்களில்

விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் வாபஸ்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - வி.செந்தில்பாலாஜி - என்.கயல்விழி செல்வராஜ் பேச்சுவார்த்தையில் உடன்பாடு!

திருப்பூர், ஏப். 22 -

கோவை திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்று வந்த விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு விசைத்தறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

கோவை. திருப்பூர் மாவட்டங்களில் 2.5 லட்சத்திற்கும் அதிகமான விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. சோமனூர். கருமத்தம்பட்டி, பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 20 ஆயிரம் விசைத்தறி உரிமையாளர்கள். ஜவுளி உற்பத்தியாளர்களிடம் இருந்து நூலை வாங்கி கூலி அடிப்படையில் துணியாக உற்பத்தி செய்து தருகின்றனர். இதனால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், 3 லட்சத்திற்கும் அதிகமானோர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூலி உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி கூலி நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஜவுளி உற்பத்தியாளர்கள் 2017, 2022 ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தப்படி கூலி உயர்வு வழங்காமல் கடந்த 2014ம் ஆண்டில் நிர்ண யிக்கப்பட்ட கூலியை மட்டுமே வழங்கி வருவதாகவும், கூலியை உயர்த்தி வழங்கக்கோரியும் கோவை,

திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் கடந்த மாதம் 19ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதம் மற்றும் கால வரையற்ற உண்ணாவிரத போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் சோமனூர் ரகங்களுக்கு 15 சதவீதமும், இதரர கங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு வழங்க ஜவுளி உற்பத்தியாளர்கள் முன்வந்தனர். இதனை ஏற்று விசைத்தறி உரிமையாளர்களின் வேலைநிறுத்த போராட்டம் மற்றும் உண்ணாவிரத போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது : ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த விசைத்தறி உரிமையாளர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அரசு வேண்டுகோளை ஏற்று ஜவுளி உற்பத்தியாளர்கள் சோமனூர் ரகங்களுக்கு 15 சதவீதமும், பல்லடம் ரகங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை சுமூகமாக முடிவுற்றது. உண்ணாவிரத போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக விசைத்தறி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்பகுதியில் சிறப்பாக தொழில் நடக்க இரு தரப்பினரும் ஒத்துழைப்பு தருவதாக கூறியுள்ளார்கள் என்று அமைச்சர் கூறினார்.

சங்க கூட்டமைப்பின் தலைவர் பூபதி கூறியதாவது : நியாயமான கூலி உயர்வு வேண்டி கடந்த 33 நாட்களாக விசைத்தறி உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக பல கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் அமைச்சர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், சோமனூர் பகுதி ரகங்களுக்கு 15 சதவீதமும், இதர ரகங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2022 ஒப்பந்தத்தில் இருந்து இந்த கூலி உயர்வு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். உண்ணாவிரத போராட்டத்தையும் வாபஸ் பெற்றுக்கொள்கிறோம். பொதுக்குழு கூடி வேலை நிறுத்தத்தை விலக்கி கொள்வோம். சுமூக தீர்வு ஏற்படுத்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

பேச்சுவார்த்தையின் போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், தொழிலாளர்கள் துறை அதிகாரிகள் சாந்தி, பிரேமா, கோவை மாநகர மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டம் - கும்பகோணம் நாச்சியார் கோவிலில்

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு - கோவி. செழியன் வழங்கினர்!

சென்னை, ஏப்.22 -

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நாச்சியார் கோவில் பாப்பாத்தி அம்மாள் மகாலில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (20.4.2025) வழங்கினார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்க ளவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) டாக்டர்.சி.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகர் மற்றும் வட்டம் ஆதிகும்பேஸ்வர சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர் என். சுவாமிநாதனுக்கு (நாதஸ்வரம்) ஓய்வூதியம் நிலுவை தொகை ரூ.1,26,000க்கான காசோலையும், கும்பகோணம் வட்டம் ஒப்பிலியப்பன் கோவில் வேங்கடாஜலபதி சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர் ந.இராமதுரைக்கு பணிக்கொடை தொகை ரூ.2,00,000/க்கான காசோலையும், மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள 400 நபர்கள் இறைபணியில் ஊழியர்களுக்கு 27 இன்னமுது பொருட்களை தலா ரூ.2,500 மதிப்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது :-

நீண்ட காலமாக அலுவலர்கள் நிலுவையிலிருந்த பதவி உயர்வு, மற்றும் பணியாளர்கள் உட்பட 933 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 162 செயல் அலுவலர்கள், 184 உதவியாளர்கள், 80 இளநிலை உதவியாளர்கள், 101 தட்டச்சர்கள், 31 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் என ஆக மொத்தம் 588 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நிய மனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 109 செயல் அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது. கருணை அடிப்படையில் 33 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

கொரோனா காலங்களில் அர்ச்சகர்களுக்கு உதவிதொகையாக ரூபாய் 4,000 மற்றும் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி மற்றும் மளிகை பொருட்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ், 29 அர்ச்சகர்கள் பணி நியமனம். 45 ஓதுவார்கள் பணி நியமனம், அதில் 11 ஓதுவார்கள் பெண்கள். திருக்கோயில்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,333 பணியாளர்கள் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளனர். திருக்கோயில்களில் 124 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் ச.சிவகுமார், துணை ஆணையர்கள் க. ராமு, திருமதி தா.உமாதேவி, உதவி ஆணையர்கள் ஆ.ரவிச்சந்திரன், தி.ஞா.ஹம்சன், கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் பொறுப்பு ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், வட்டாட்சியர் ச.சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

அடிமை அ.தி.மு.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் வகையில் கம்பைநல்லூரில் விழிப்புணர்வு பிரசுரங்கள்!

கு.தமிழழகன் - ராஜ் கமல் - திருமதி பரணி சக்தி வழங்கினர்!

தருமபுரி, ஏப். 22 -

தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அரூர் சட்டமன்ற தொகுதி கம்பைநல்லூர் பேரூராட்சியில் நீட் தேர்வை தமிழ் நாட்டில் அனுமதித்து மாணவ, மாணவியரின் உயிரை பறித்து இந்தித் திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், கல்விநிதி மறுப்பு, தொகுதி மறுசீரமைப்பு என பா.ஜ.க. அரசின் அனைத்து துரோகங்களுக்கும் துணை நின்று கூட்டணி அமைத்துள்ள அடிமை அ.தி.மு.க.வின் முகத்திரையைக் கிழித்து மக்களுக்கு விழிப்புணர்வு அளித்திடும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் ஆலோசனைபடி தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழன் தலைமையில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ராஜ்கமல்,திருமதி.பரணிசக்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில் மொரப்பூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினவேல், கம்பைநல்லூர் பேரூராட்சி தலைவர் வடமலை முருகன்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதாமோகன் தாஸ்,மாவட்ட துணை அமைப்பாளர்கள் அருண் உதயசூரியன்,மாணவர் அணி செ.அரவிந்த் ,ராசிதமிழ்,கவுன்சிலர்கள் ஜெயக்குமார்,சேகர்,ஆதிமூலம்,ஐடி விங் நிர்வாகிகள் பேசும்தெய்வம்,அரசு, சதிஷ்குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் சிவசக்தி, தாஸ், பரத், அரசு,

நிர்வாகிகள் லட்சுமணன், ஆதிமூலம், கிருஷ்ண மூர்த்தி, ஜெயவேல், சதாசிவம்,ராபின், ராமு, நாகேந்திரன், சின்னபையன், பெரியசாமி,சேட்டு, ராமு,சிங்காரவேலன், ராஜசேகர், இளையராஜா மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பொங்கலூர் அண்ணா திடலில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசிரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ. ராஜசேகரன், ஈ.பாலசுப்பிரணியம் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், மாவட்ட துணை செயலாளர், வழக்கறிஞர் எஸ்.குமார் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வே.மதிமாறன், கி.ரேஷ்மா ஆகியோர் உரையாற்றினர். இதில் டிகேடி மு.நாகராசன், கே.பி.எஸ்.மகாலிங்கம், பெ.அசோகன், சு.கிருஷ்ணமூர்த்தி, நா.சோமசுந்தரம், பி.விஸ்வலிங்கசாமி, எஸ்.பாலுசாமி, நகர செயலாளர் ந.ராஜேந்திரக்குமார், இரா.சுப்பையன், சா.ராஜசேகரன், முத்துக்குமாரசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கும்பகோணம் வாணி விலாச சபாவில் -

கலைஞரின் "தூக்கு மேடை" திரைப்படம் இலவசமாக திரையிடல்!

மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர் , ஏப். 22 -

கும்பகோணத்தில் 110 ஆண்டுகளுக்கு மேலாக கலை வளர்த்து வரும் வாணி விலாச சபாவில் கலைஞரின் "தூக்கு மேடை" திரைப்படம் இலவசமாக திரையிடப்படுவதை முன்னிட்டு கழகத் தோழர்கள், பொதுமக்கள் பங்கேற்க தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளரும், சபா செயலாளருமான சு. கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகரில் கடந்த 110 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் வாணி விலாச சபா திரையரங்கில் (விஜயலெட்சுமி தியேட்டர்) பண்முகத்தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை போற்றும் விதமாக முன்னிட்டு மாதம் தோறும் ஒருநாள் "இரண்டு காட்சிகள்" கலைஞர் அவர்கள் எழுதிய, கதைவசனம் கொண்ட பழைய திரைபடங்கள் திரையிடப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து இந்த மாதம் 23.04.2025 புதன் கிழமை காலை 11.00 மணி காட்சியிலும், மாலை 06.00 மணிகாட்சியிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைவண்ணதில், நடிகர்கள் வாகை சந்திரசேகர், மேனகா, நாகேஷ் நடித்த வரலாற்று புகழ் பெற்ற, காவியத்திரைப்படம் "தூக்கு மேடை" திரைபடம் திரையிடப்பட உள்ளது.

அதுசமயம் கழகத் தோழர்களும், பொதுமக்களும் தவறாது வருகை தந்து திரைப்படத்தை கண்டுகளிக்க கழகத் தோழர்களும், வாணிவிலாச சபா நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாது வந்து காவியத் திரைப்படத்தை கண்டுகளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நாச்சியார் கோவில் பாப்பாத்தி அம்மாள் மகாலில் கும்பகோணம் வட்டம் ஆதிகும்பேஸ்வரர் சுவாமி திருக்கோயில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர் என். சுவாமிநாதனுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகை ரூ.1,26,000 க்கான காசோலையினை இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆகியோர் நேற்று (20.04.2025) வழங்கினார்கள். மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) டாக்டர்.சி பழனி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் ச..சிவகுமார், துணை ஆணையர்கள் க. ராமு, திருமதி .தா. உமாதேவி, உதவி ஆணையர்கள் ஆ.ரவிச்சந்திரன், தி.ஞா.ஹம்சன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.